## FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8092318

1. District / மாவட்டம் : Madurai PS: / காவல்நிலையம் V&AC Year / ஆண்டு: 2019 FIR No. / மு.த.அ. எண்: 22/19 Date / நாள்: 23.10.19

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7 of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (amendment) Act 2018

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from / நாள் முதல் : 22.10.19 Date to / நாள் வரை : 22.10.19

Time Period : நேர அளவு Time from / நேரம் முதல் : 5.30 P.M Time to / நேரம் வரை : 09.30 PM

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.10.19 Time / நேரம் : 16.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 23.10.19 Time / நேரம் : 16.20 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written type.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 7 Km. North East

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி TASMAC WINE SHOP, Shop No.5417 Seeman Nagar, Karupayurani, Madurai District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :

இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. A. Ashok Kumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Ayyalsamy

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் District Cell Inspector (g) Address : முகவரி Office of the District Cell Officer Collectorate Campus, Madurai

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)

தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. M. Marimuthu 43/2019, S/o Muthusamy Deputy Collector / Assistant Commissioner (Excise), District Collectorate Campus, Madurai

8. Reasons for delay in reporting by the complainant / Informant:

குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

———

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சாராம்சம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheets with typed matter in tamil from Page No. 5 to 7 are enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் A. Ambrose Jeyarani, Inspector of Police, ... PAC Madurai ... புலனாய்வுக்கு ... அலுவலரால் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டது / ......................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் கையொப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

23/10/19

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் கையொப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.10.19 at 17.15hrs.

Name: பெயர் T. SURIYAKALA
Rank: பதவி Inspector of Police, No.
PAC Madurai
23.10.19

GCP-240-04(Type-2) 90,000 Cps (21.3.14)(ICL-17)p.2

Submitted,

இன்று 23.10.2019-ம் தேதி 16.00 மணிக்கு, காவல் ஆய்வாளர் த.சூரியகலா ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு. அ.அசோக்குமார் என்பவர் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளராகிய என்னிடம் புகார் மனு ஒன்றை அளித்தார். அந்த புகார் மனுவை பார்வையிட்டு, மதுரை ஊ.த.க. பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், மேற்படி புகார் மனு மற்றும் அத்துடன் ஒப்படைத்த திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள் : 22.10.2019, மதுரை மாவட்ட உதவி ஆணையர் (கலால்) திரு.மாரிமுத்து அவர்கள் வசமிருந்து கைப்பற்றப்பட்ட லஞ்சப் பணம் ரூ.35,000/-, அப்பணம் வைக்கப்பட்டிருந்த கவர்கள் மற்றும் சம்பவ இடத்தில் அளித்த வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். புகார் மனுவில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர் அ.அசோக்குமார், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க. எண். ஐ1/1006/2019, நாள்: 23.10.2019 அய்யா, பொருள் : திடீர் இணை ஆய்வு - மதுரை மாவட்டம் - கலால் துறை - திரு.மு.மாரிமுத்து, உதவி ஆணையர் (கலால்), மதுரை மாவட்டம் கருப்பாயூரணி, சீமான் நகர், அரசு மதுபான கடை (டாஸ்மாக்) எண் 5417 முன்பு வாகனத்தை நிறுத்தி விட்டு லஞ்சப் பணம் பெற்ற போது திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - ரூ.35,000/- மற்றும் பணம் வைக்கப்பட்டிருந்த கவர்கள் கைப்பற்றப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது - தனி அறிக்கை அனுப்புதல் தொடர்பாக. நேற்று, 22.10.2019-ம் தேதியன்று, மதுரை மாவட்ட கலால் உதவி ஆணையர் திரு.மு.மாரிமுத்து அவர்கள் மதுரையில் உள்ள அரசு மதுபானக் கடைகள், கிளப்கள் மற்றும் ஹோட்டல்களில் உள்ள பார்களுக்கு நேரில் சென்று தீபாவளி மாமூல் வசூலிப்பதாகக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பேரில் நானும், மதுரை ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.த.சூரியகலா, திரு.க.குமரகுரு மற்றும் போலீஸ் பார்ட்டியினரும் இணைந்து நேற்று மாலை சுமார் 16.00 மணி முதல் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தின் வடக்கு நுழைவாயில் பகுதியில் உள்ள மதுரை மாவட்ட உதவி ஆணையர் கலால் அலுவலகத்தையும், சுற்றுப் பகுதியையும் தொடர்ந்து கண்காணித்த போது, மாலை சுமார் 16.50 மணியளவில், மதுரை மாவட்ட கலால் உதவி ஆணையர் திரு.மு.மாரிமுத்து TN 59 G 0933 என்ற பதிவெண் கொண்ட வெள்ளை நிற டாடா ஸ்பேசியோ அரசு வாகனத்தில் புறப்பட்டுச் சென்றார். மேற்படி அரசு வாகனத்தை கலால் அலுவலக உதவியாளர் திரு.செண்பகபாண்டியன் என்பவர் ஓட்டிச் சென்றார். மேற்படி வாகனத்தை நானும், ஊழல் தடுப்பு பிரிவு அலுவலர்களும் வாகனங்களில் மறைவாகப் பின் தொடர்ந்து சென்று கண்காணித்த போது, மதுரை - சிவகங்கை ரோட்டில் உள்ள சாத்தமங்கலத்தில் உள்ள டாஸ்மாக் கடை எண் 5125 அருகில் வாகனம் நின்றது. டிரைவர்

இருக்கையில் இருந்த அலுவலக உதவியாளர் திரு.செண்பகபாண்டியன் வண்டியிலிருந்து இறங்கிச் சென்று, மேற்படி டாஸ்மாக் கடைக்கு வெளியே நின்று விற்பனையாளர் கொடுத்த பணத்தைப் பெற்று அதனை திரு.மாரிமுத்துவிடம் கொடுத்தவுடன் அவர் அதனை வாங்கி தனது சட்டைப் பையில் வைத்துக் கொண்டார். உடனே வண்டி புறப்பட்டுச் சென்றது. அந்த வாகனத்தை பின்சென்று தொடர்ந்து கண்காணித்த போது, கருப்பாயூரணி சீமான் நகரில் உள்ள டாஸ்மாக் கடை எண் 5417-ன் முன்பு மேற்படி அரசு வாகனத்தை ஓரமாக நிறுத்தி விட்டு, திரு.செண்பகபாண்டியன் வண்டியை விட்டு இறங்கிச் சென்று மேற்படி டாஸ்மாக் கடையில் இருந்த விற்பனையாளரிடம் பேசியவுடன், கடையிலிருந்த விற்பனையாளர் ஒருவர் சில ஆவணங்களையும், பணத்தையும் எடுத்துக் கொண்டு திரு.செண்பகபாண்டியனுடன் வந்து, வாகனத்தின் முன் இருக்கையில் அமர்ந்திருந்த திரு.மாரிமுத்துவிடம் கொடுப்பதற்காக வந்தார். அப்போது, நானும், என்னுடன் இருந்த ஊழல் தடுப்பு பிரிவு போலீஸ் பார்ட்டியும் மேற்படி வாகனத்தின் அருகில் சென்று திரு.மாரிமுத்து அவர்களிடம் அறிமுகம் செய்த பின்னர், அவரையும், வாகனத்தை ஓட்டி வந்த அலுவலக உதவியாளர் திரு.செண்பக பாண்டியன், கடை விற்பனையாளர் திரு.வெள்ளைச்சாமி மற்றும் மேற்படி அரசு வாகனத்தையும் சோதனையிட்டதில் திரு.மாரிமுத்து வசம் கத்தை கத்தையாகவும், கவர்களிலும் பணம் இருந்தது. மேலும், திரு.வெள்ளைச்சாமி வைத்திருந்த அவரது கடை வருகைப் பதிவேட்டில் ரூ.1,000/- பணமும் இருந்தன. மேற்படி, பணம் குறித்து திரு.மாரிமுத்து சரியான விவரங்கள் தெரிவிக்காத காரணத்தாலும், திடீர் இணை ஆய்வு மேற்கொண்ட இடம் பொது மக்கள் மற்றும் வாகன போக்குவரத்து அதிகமுள்ள மதுரை - சிவகங்கை மெயின் ரோடு என்பதாலும், அவர்களை அழைத்துக் கொண்டு அதே டாஸ்மாக் கடை எண் 5417 உடன் இணைந்துள்ள பாரின் உள்ளே பின்பகுதிக்கு அழைத்துச் சென்று விசாரித்த போது, மேற்படி கடை விற்பனையாளர் திரு.வெள்ளைச்சாமி அளித்த வாக்குமூலத்தில், கலால் உதவி ஆணையர் அலுவலக உதவியாளர் திரு.செண்பகபாண்டியன் வண்டியிலிருந்து இறங்கி வந்து, கலால் உதவி ஆணையர் திரு.மாரிமுத்து வண்டியில் இருப்பதாகவும், கடையின் வருகைப் பதிவேடு, தினசரி சிட்டா ஆகிய ஆவணங்களை எடுத்துக் கொண்டு, அத்துடன் ஆயிரம் ரூபாய் பணமும் கொண்டு வரச் சொன்னதன் பேரில், தன்னுடன் பணியிலிருந்த மற்றொரு டாஸ்மாக் விற்பனையாளர் திரு.முத்துச்சாமியிடம் விவரம் சொல்லி விட்டு, கடையிலிருந்து திரு.மாரிமுத்துவுக்கு கொடுப்பதற்காக இரண்டு 500 ரூபாய் தாள்களை எடுத்து வந்ததாகச் சொல்லி, தான் கொண்டு வந்த ஆயிரம் ரூபாயை மேற்படி பதிவேட்டின் உள்ளே இருந்து எடுத்து ஆஜர் செய்தார். கடையில் இருந்த மற்றொரு விற்பனையாளர் திரு.முத்துச்சாமியிடம் விசாரிக்க அவரும் அதனை ஒப்புக் கொண்டார். அவர்களது வாக்குமூலத்தின் பேரில், நான் மேற்படி மாமூல் பணம் ரூபாய் ஆயிரத்தை விற்பனையாளர் திரு. வெள்ளைச்சாமியிடமிருந்து கைப்பற்றினேன். தொடர்ந்து, வாகனத்தை ஓட்டி வந்த அலுவலக உதவியாளர்

திரு.செண்பக பாண்டியனிடம் விசாரித்த போது அவர் அளித்த வாக்குமூலத்தில், நேற்று மதியம் சுமார் 1 மணியளவில், கலால் உதவி ஆணையர் திரு.மாரிமுத்து அவர்கள் அழைத்ததன் பேரில் தானும், டிரைவர் திரு.அழகேசனும் TN 59 G 0933 என்ற அரசு வாகனத்தில் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்குச் சென்றதாகவும், அங்கு இருந்த திரு.மாரிமுத்து அவர்களை வாகனத்தில் அழைத்துக் கொண்டு அவரது உத்தரவின் பேரில், மதுரை பசுமலையில் உள்ள தி கேட் வே ஸ்டார் ஹோட்டலுக்கு சென்று அங்கிருந்த மதுபானக் கூடத்தை திரு.மாரிமுத்து அவர்கள் பார்வையிட்ட பின்னர், அங்குள்ள உணவகத்தில் அவருடன் சேர்ந்து தானும், அழகேசனும் மதிய உணவு சாப்பிட்டதாகவும், பின்னர் மதுபானக் கூடத்தின் பொறுப்பாளர் பணம் இருந்த ஒரு வெள்ளை நிற ஹோட்டல் கவரை தன்னிடம் கொடுத்ததாகவும், தான் அதனை வாங்காமல், திரு.மாரிமுத்து அவர்களிடமே நேரில் கொடுத்து விடுமாறு சொன்னதாகவும், பின்னர் அந்த பொறுப்பாளர் வெள்ளை நிற ஹோட்டல் கவரை திரு.மாரிமுத்துவிடம் கொடுத்ததாகவும், அவர் அதனை வாங்கி தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டதாகவும் தெரிவித்தார். மேலும், அங்கிருந்து புறப்பட்டு தனக்கன்குளம் டாஸ்மாக் கடைக்கு சென்றதாகவும், அங்கு தானும், டிரைவர் அழகேசனும் வண்டியில் இருந்ததாகவும், திரு.மாரிமுத்து கடைக்குச் சென்று பார்வையிட்டதாகவும், அங்கிருந்து புறப்பட்டு மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்தவுடன் திரு.மாரிமுத்து வண்டியிலிருந்து இறங்கி உள்ளே சென்று விட்டதாகவும், டிரைவர் அழகேசன் ஓய்வு பெற்ற இராணுவத்தினர் சங்கக் கூட்டத்துக்குச் செல்வதால், தன்னை வண்டியை ஓட்டுமாறு கேட்டுக் கொண்டதாகவும் தெரிவித்தார். சிறிது நேரத்தில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து வெளியே வந்த திரு.மாரிமுத்து சொன்னதன் பேரில், தான் மேற்படி அரசு வாகனத்தில் அவரை ஏற்றிக் கொண்டு மேலமடை ரோட்டில் சென்ற போது, சாத்தமங்கலம் டாஸ்மாக் கடை அருகில் வண்டியை நிறுத்தி விட்டு, மேற்படி கடைக்குச் சென்று பணம் வாங்கி வருமாறு திரு.மாரிமுத்து சொன்னதன் பேரில் தான் சென்று டாஸ்மாக் கடையிலிருந்த விற்பனையாளரிடம் விவரம் சொன்னவுடன், அவர் கொடுத்த ஆயிரம் ரூபாயை வாங்கி வந்து அதனை திரு.மாரிமுத்து அவர்களிடம் கொடுத்ததாகவும், அதன் பின்னர் வண்டியை எடுத்துக் கொண்டு கருப்பாயூரணி சீமான் நகரில் உள்ள டாஸ்மாக் கடையில் வண்டியை ஓரமாக நிறுத்தி விட்டு, திரு.மாரிமுத்து சொன்னதன் பேரில், மேற்படி கடையிலிருந்த விற்பனையாளரிடம் வருகைப் பதிவேடு மற்றும் தினசரி சிட்டாவுடன் ஆயிரம் ரூபாய் எடுத்துச் சென்று திரு.மாரிமுத்து அவர்களைச் சந்திக்குமாறு சொன்னதன் பேரில், அதன்படி கடை விற்பனையாளர் வாகனத்தின் அருகில் சென்று திரு.மாரிமுத்து அமர்ந்திருந்த இருக்கைக்கு அருகே நின்று பேசிக் கொண்டிருந்த போது, திடீர் இணை ஆய்வுக் குழுவினர் வந்து விசாரித்ததாகவும் தெரிவித்தார். தொடர்ந்து, திரு.மாரிமுத்து அவர்களிடம் விசாரித்த போது, தீபாவளி சமயம் என்பதால் டாஸ்மாக் கடைகள், ஹோட்டல் பார்கள் மற்றும் கிளப்புகளை நேற்று மதியம் சுமார் 1 மணி முதல்

ஆய்வு செய்ததாகவும், முதலில் பசுமலை தி கேட் வே ஹோட்டல் மதுபானக் கூடத்தை பார்வையிட்ட பின்னர் பார் பொறுப்பாளர் வெள்ளை நிற ஹோட்டல் கவரில் வைத்துக் கொடுத்த ரூ.5,000/-ஐ பெற்றுக் கொண்டதாகவும், அதனைத் தொடர்ந்து, தனக்கன்குளத்தில் உள்ள டாஸ்மாக் கடையைப் பார்வையிட்ட போது, தான் ஏற்கனவே சொன்னபடி தென்றல் கிளப் மற்றும் ஈஸ்ட் கேட் கிளப் ஆகிய கடைகளின் சார்பாக பொறுப்பாளர் ஒருவர் சிறிய கவரில் வைத்துக் கொடுத்த ரூ.10,000/-ஐ பெற்றுக் கொண்டதாகவும், மேலும் KBS கிளப் பொறுப்பாளர் பிரவுன் நிற கவரில் வைத்துக் கொடுத்த ரூ.5,000/-ஐ பெற்றதாகவும், மேலும் அங்கு வந்திருந்த பெஸ்ட் கிளப் பொறுப்பாளரிடம் ரூ.10,000/- பெற்றதாகவும், ஐடியல் பார் பொறுப்பாளரிடம் ரூ.2,000/- பெற்றதாகவும், சற்று முன்னர் சாத்தமங்கலம் டாஸ்மாக் கடை விற்பனையாளரிடம் அலுவலக உதவியாளர் திரு.செண்பகபாண்டியன் மூலம் ரூ.1,000/- பெற்றதாகவும், சற்று முன்னர் ரிங்ரோடு திரு.கண்ணன் என்பவர் பார் ஆரம்பிக்க ரூ.1,000/- கொடுத்ததாகவும், அதன் பின்னர் கருப்பாயூரணி சீமான் நகர் 5417 டாஸ்மாக் கடையில் திரு.செண்பகபாண்டியனிடம் சொல்லி ரூ.1,000/- கொண்டு வரச் சொன்னதன் பேரில் கடை விற்பனையாளர் திரு.வெள்ளைச்சாமி பணம் கொண்டு வந்து தன்னைச் சந்தித்த போது திடீர் இணை ஆய்வு அலுவலர்கள் வந்து விட்டதாகவும் தெரிவித்து, தனது பேண்ட் மற்றும் சட்டை பைகளில் வைத்திருந்த லஞ்சப்பணம் ரூ.34,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். நான் அதனைக் கைப்பற்றினேன். மேற்படி திடீர் இணை ஆய்வு குறித்து மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.செல்வராஜ் அவர்களுக்கு ஊழல் தடுப்பு பிரிவு காவல் ஆய்வாளர் தகவல் தெரிவித்ததன் பேரில், சிறிது நேரத்தில் மதுரை கிழக்கு தாலுகா அலுவலக வட்டாட்சியர், திருமதி. விஜயலெட்சுமி என்பவர் டாஸ்மாக் கடை எண் 5417-க்கு நேரில் வந்தார். அவரிடம், திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது குறித்தும், அப்போது மதுரை கலால் உதவி ஆணையாளர் திரு. மாரிமுத்து அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட லஞ்சப் பணம் ரூ.34,000/- குறித்தும் தெரிவிக்கப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வு குறித்து, ஊழல் தடுப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து கொண்டு வரப்பட்ட மடிக்கணிணி மற்றும் பிரிண்டர் மூலம் நேற்று 22.10.2019-ம் தேதி மாலை 05.30 மணி முதல் இரவு 09.30 மணி வரை திடீர் இணை ஆய்வு செயல்முறை குறிப்புரை சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்டு, கையொப்பமிட்ட பின்னர் அதன் நகல் திரு.மாரிமுத்து, உதவி ஆணையர் (கலால்) அவர்களுக்கும் திருமதி.விஜயலட்சுமி, வட்டாட்சியர், மதுரை கிழக்கு வட்டம் அவர்களுக்கும் வழங்கப்பட்டது. தீபாவளி சமயத்தில், டாஸ்மாக் கடைகள், ஹோட்டல் பார்கள், கிளப்புகளுக்கு அரசு வாகனத்தில் நேரில் சென்று சட்ட விரோதமாக லஞ்சம் பெற்ற மதுரை மாவட்ட கலால் உதவி ஆணையர் திரு.மு.மாரிமுத்து அவர்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இந்த தனி அறிக்கையை தங்களுக்கு அனுப்பியுள்ளேன். இத்துடன், சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்ட திடீர் இணை ஆய்வு செயல்முறைகள்

குறிப்புரை, நாள் 22.10.2019 மற்றும் திரு.மாரிமுத்து அவர்கள் வசமிருந்து கைப்பற்றப்பட்ட லஞ்சப் பணம் ரூ.35,000/-, The Gateway Hotel Pasumalai, Madurai என்ற ஹோட்டல் முகவரியுள்ள வெள்ளை நிற கவர், East Gate, Thenral என கையால் எழுதப்பட்ட சிறிய வெளிர் நிற கவர், 500 X 10 = 5000 KBS என கையால் எழுதப்பட்ட காக்கி நிற கவர், டாஸ்மாக் கடை எண் 5417-ன் வருகைப் பதிவேடு, தினசரி சிட்டா ஆகியவற்றையும், சம்பவ இடத்தில் திரு.மாரிமுத்து, திரு.செண்பகபாண்டியன், திரு.வெள்ளைச்சாமி, திரு.முத்துச்சாமி அளித்த வாக்குமூலங்கள் ஆகியவற்றையும் இணைத்து மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தங்களுக்கு அனுப்பியுள்ளேன். ஒப்பம்/- XXXXX 23/10/2019 (அ. அசோக் குமார்) ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. இணைப்பு: மேற்கண்டவாறு.

Sir, Received report along with Joint Surprise Check Proceedings, Dated:22.10.2019, Cash Rs.35,000/- and Three covers, Four statements of officials and seized documents and registered a case in Madurai V&AC Crime No.22/2019 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 on 23.10.2019 at 16.30 hrs. ஒப்பம்/- XXXXX (T. Suriyakala), Inspr, V&AC, 23/10/19.

The original FIR along with report of Tr. A. Ashok Kumar, Joint Surprise Check Proceedings Dated: 22.10.2019 and 4 statements of officials are submitted to the Hon'ble Special Judge, Special Court for the Trial of Cases under PC Act, Madurai and other copies were sent to the officers concerned.

(T. Suriyakala)
Inspr. of Police
V&AC Madurai
23.10.19